பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

# ஈழநாடு
The EELA NADU

மலர்: 19 ஐப்பசி 4 ஜுல்ஹஜ்: 6 இதழ் 250
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 20-10-77

## வேலணையில் சூறாவளி
## கூரை ஓடுகள் 'பறந்தன'

யாழ்ப்பாணம், வியாழன்

நேற்று வேலணையின்மட்டும் ஒரு சூறாவளி வீசியுள்ளது. வேலணையிலுள்ள ஊர்காவற்றுறைத் தொகுதி அபிவிருத்திச் சபைக் காரியாலயக் கட்டிடக் கூரை முற்றாக இச்சூறாவளியினால் பெயர்க்கப்பட்டுக் கால் மைல் தூரத்தில் வீசப்பட்டது.

வேலணை முருகன் கோவில் கூரை ஓடுகளும் அரிசி ஆலையின் ஓடுகளும் சூறாவளியினால் அள்ளப்பட்டன. இதனால் ஆலையில் இருந்த அரிசி மூடைகள் நனைந்துள்ளன. அபிவிருத்திச் சபைக் காரியாலய தளபாடங்களும் மழையினால் நனைகின்றன. இப்பகுதியில் தொடர்ந்து பெருமழை பெய்த வண்ணமிருக்கிறது.

வேலணைத் தபால் நிலையமும் தபால் நிலைய அதிபரின் இல்லமும் பெருமழை காரணமாக ஒழுக்குக்குள்ளாகியுள்ளன.

(வேல. தி. அ)

# தோல்வி கண்ட சதிப்புரட்சியில் சம்பந்தப்பட்ட
# 37 பேருக்கு மரண தண்டனை!
## பங்களாதேஷ் நீதிமன்றத்தீர்ப்பு நிறைவேறியது

டாக்கா, அக். 19

**இம்மாதம் இரண்டாம் திகதி பங்களாதேஷில் மேற்கொள்ளப்பட்ட (தோல்வியுற்ற) சதிப்புரட்சியில் சம்பந்தப்பட்ட முப்பத்தேழு பேர் இன்றுசுட்டுக்கொல்லப்பட்டனர்! மரணதண்டனை நிறைவேற்றப்பட்ட இவர்கள், இராணுவப்படையையும் விமானப்படையையும் சேர்ந்தவர்கள் என்று பங்களாதேஷ் வானொலி அறிவித்தது.**

பங்களாதேஷ் இராணுவ அரசாங்கத்தைக் கவிழ்க்க இம்மாதம் 2-ம் திகதி அதிகாலை மேற்கொள்ளப்பட்ட சதி முயற்சி, சில மணி நேரத்திலேயே தோல்வி அடைந்ததும், சதிமுயற்சியை நசுக்கும் சண்டையில் நூற்றுக்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டதும் தெரிந்ததே.

ஜப்பானிய 'டி.ஸி 8' பிரயாணிகள் விமானம் ஜப்பானிய செம்படையினரால் கடத்தப்பட்டு டாக்காவில் தரையிறக்கப்பட்டு அது மத்திய கிழக்கு நோக்கிப் புறப்பட ஆயத்தமாக இருந்த நேரத்தில், பங்களாதேஷில் இச்சதி முயற்சி மேற்கொள்ளப்பட்டதுஎன்பது குறிப்பிடத்தக்கது.

சதிப்புரட்சியில் ஈடுபட்டார்கள் என்ற சந்தேகத்தின் மீது தேசத்துரோகக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு, பங்களாதேஷ் இராணுவத்தையும் விமானப்படையையும் சேர்ந்த 450க்கும் அதிகமான படைவீரர்கள், இராணுவ நீதிமன்றத்தால் விசாரணை செய்யப்பட்டனர். இந்த விசாரணைகளின் முடிவில் 37 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. 20 பேருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது இது தவிர சுமார் 500 படை வீரர்கள் விசாரணைகளை எதிர்நோக்கிக்கொண்டிருக்கின்றனர் என்று பங்களாதேஷ் வானொலி இன்று அறிவித்தது.

இந்த மரண தண்டனை பெற்ற குற்றவாளிகள் சுட்டுக்கொல்லப்படவேண்டும்என்றுவிசேஷ இராணுவ நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இதனைத்தொடர்ந்து தண்டனை உடனடியாக நிறைவேற்றப்பட்டது.

நீதிமன்ற விசாரணையின் முடிவில் 63 பேர் விடுதலை செய்யப்பட்டனர்.

## இந்திரா காந்தி மீது 17ந் திகதி விசாரணை

புதுடில்லி, அக். 19

இந்தியாவின் முன்னாள் பிரதமர் திருமதி இந்திரா காந்திக்கு எதிராக மத்திய புலனாய்வுத்துறையினர் தாக்கல் செய்திருந்த மனு மீது உயர்நீதிமன்றத்தில் அடுத்த மாதம் 17ம் திகதி விசாரணைகள் நடைபெறும்.

திருமதி இந்திராகாந்தி மத்திய புலனாய்வுத்துறையினரினால் கைது செய்யப்பட்டு பின்னர் விடுதலைசெய்யப்பட்டிருந்தார். டில்லி மாஜிஸ்திரேட்டினால் விடுதலைசெய்யப்பட்டதை ஆட்சேபித்து மத்திய புலனாய்வுத் துறையினர் டில்லி உயர் நீதி மன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்தனர். இந்த மனுமீது அடுத்த மாதம் 17ந் திகதி விசாரணைகள் நடைபெறவிருக்கிறது.

விசாரணையின்போது திருமதி இந்திராகாந்தி நேரடியாக சமூகமளிக்கவேண்டும், அல்லது அவரது வழக்கறிஞர் சமூகமளிக்கவேண்டும் என்று டில்லி உயர் நீதி மன்றம் அறிவித்துள்ளது.

## விமான ஓட்டிகள் வேலை நிறுத்தம்!

நியூயோர்க், அக். 19

சர்வதேச விமான ஓட்டிகள் சங்கத்தைச் சேர்ந்த 55,000 பேர், இம்மாதம் 25ம் திகதி 48மணிநேர அடையாள வேலைநிறுத்தம் செய்ய முடிவுசெய்துள்ளனர்!

அண்மையில் மேற்கு ஜெர்மன் விமானம் திசை திருப்பப்பட்டு சோமாலியாவில், பிரதம விமான ஓட்டி சுட்டுக்கொலை செய்யப்பட்ட பயங்கரவாத நிகழ்ச்சியைக் கண்டிக்கும் வகையிலேயே இந்த வேலை நிறுத்தம் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வேலை நிறுத்தம் நடைபெறும் பட்சத்தில் உலகின் எந்த மூலையிலும் விமானங்கள் ஓடமுடியாது.

''விமானக் கடத்தலைக் கண்டிக்கும் வகையில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபை விவாதித்து, தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்.

இது நடக்காதபட்சத்தில் 25-ம் திகதி வேலை நிறுத்தம் நடைபெறும். ஐ. நா. வின் ஆதரவைப் பொறுத்து வேலை நிறுத்தம் பின்னர் ஒத்திவைக்கப்படலாம் என்று சர்வதேச விமான ஓட்டிகள் சங்கத்தைச் சேர்ந்த பிரமுகர் ஒருவர் இன்று தெரிவித்தார்.

வேலை நிறுத்த முடிவுக்கு உடனடியாக பத்து நாடுகளைச் சேர்ந்த விமானக் கம்பெனிகள் இணக்கம் தெரிவித்துள்ளன.

# மத்திய கிழக்கில்
## 2,50,000 பேருக்கு வேலை!
### அமைச்சர் ஹமீத் தகவல்

லண்டன், அக். 19

மத்தியகிழக்கு நாடுகளில் இலங்கையருக்கு நிரந்தரமாக வேலைவாய்ப்பு பெற்றுக்கொடுப்பதற்கான பேச்சுவார்த்தைகள், வெற்றியளித்துள்ளதாக வெளிவிவகார அமைச்சர் ஜனாப் ஏ. ஸி. எஸ். ஹமீட் தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்தின்படி அடுத்த ஆண்டு, இரண்டு லட்சத்து ஐம்பதினாயிரம் இலங்கையர்கள் வேலைவாய்ப்பைப் பெறவுள்ளனர் என்று அமைச்சர் தெரிவித்துள்ளார்.

''இதற்காக கொழும்பில் பயிற்சி நிலையங்களை நிறுவவும் சிறந்த ஏஜன்ஸிகளை நியமிப்பதற்கும் அரசு தயாராகவுள்ளது. இது குறித்து அரபு நாட்டின் தலைவர்களது அறிக்கைகள் கிடைத்ததும், வேலைவாய்ப்புக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டு, தெரிவு செய்யப்பட்டு பயிற்சியளிக்கப்படும். மத்தியகிழக்கு நாடுகளில் வேலைவாய்ப்புப் பெறுபவர்கள் முன்னைய ஒப்பந்தங்களின்படி வேலையைப் பெறாமல், நிரந்தரமாக வேலையைப் பெறுவார்கள்'' என்று வெளிநாட்டு அமைச்சர் ஜனாப் ஏ. ஸி. எஸ். ஹமீட் இங்கு தெரிவித்தார்.

(ம)

# அநாதை இல்லம் இராணுவத்திற்கு?
## பிரதமரிடம் ஆட்சேபம்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் பண்ணையில் உள்ள அநாதைகள் இல்லக் கட்டிடத்தை இராணுவத்தினருக்கு ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுவது குறித்து கடும் ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அநாதை இல்லம் 5ம் ஜோர்ஜ் மன்னன் ஞாபகார்த்த கட்டிடத்தில் இயங்கி வருகிறது. இந்த இல்லத்தில் 26 அநாதைப்பிள்ளைகள் இருக்கின்றனர்.

இராணுவத்திற்கு இக் கட்டடத்தை ஒப்படைக்க எடுக்கப்படும் நடவடிக்கை தர்மத்தை அழிக்கும் செயல் என்று மேற்படி ஸ்தாபனத்தின் செயலாளர் சட்டத்தரணி திரு. த. சங்கரப்பிள்ளை பிரதமருக்கு அனுப்பிவைத்துள்ள தந்தியில் ஆட்சேபம் தெரிவித்துள்ளார்.

இராணுவத்தினருக்கு இக் கட்டடம் ஒப்படைக்கப்பட்டால் இங்குள்ள மேற்படி பிள்ளைகள் புகலிடம் தேடி எங்கு செல்வர் என்றும் அவர் தமது தந்தியில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த எண்ணத்தை கைவிடுமாறு கோரும் இக் கோரிக்கையின் பிரதிகள் சமூக சேவைகள் அமைச்சர் எதிர்க்கட்சித் தலைவர், யாழ்ப்பாணம் எம். பி. ஆகியோருக்கும் அனுப்பிவக்கப்பட்டுள்ளன. [உ]

## நாடு பூராவும் கடுமையான மழை

கொழும்பு, புதன்

நாடு பூராவும் கடுமையான மழை பெய்துகொண்டிருக்கிறது, பலஇடங்களில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளன. மலைநாட்டில் சில இடங்களில் மண்சரிவுகள் ஏற்பட்டுள்ளன.

கொழும்பு மாநகரசபை பகுதியில் 1,200 பேர் வீடுகளை இழந்துள்ளனர். தாழ்வான பகுதிகள் வெள்ளத்தினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்டவர்களுக்கு தற்காலிக இருப்பிட வசதிகளும், இலவச உணவும் வழங்கப்பட்டு வருகிறது.

## வீடு தீக்கிரை

உடுப்பிட்டி, புதன்

இனம் தெரியாத நபர்களினால் வீடொன்று நள்ளிரவில் தீக்கிரையாக்கப்பட்டது. துன்னாலை தெற்கைச் சேர்ந்த காசிநாதர் என்பவரின் வீடே தீக்கு இரையானதாம்.

இதனால் இரண்டாயிரம் ரூபா நஷ்டமேற்பட்டுள்ளதென்று முறையிடப் பட்டுள்ளது. இத் தீவிபத்துச் சம்பந்தமாகத் துன்னாலை தெற்குக் கிராம சேவகர் திரு. செ. அ. ஞானச்சந்திரன் விசாரணை செய்து வருகின்றார். (உ)

## கட்டிடவேலை ஆரம்பம்

சுழிபுரம், புதன்

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் ஒருலட்சத்து இருபதினாயிரம் ரூபாய் செலவில் கட்டப்படும் புதிய கட்டிடத்திற்கான ஆரம்ப வேலைகள் ஆரம்பமாகியுள்ளன.

சென்ற மாதம் கல்லூரிப் பழைய மாணவரும் எதிர்க்கட்சித் தலைவருமான திரு. அ. அமிர்தலிங்கம் புதிய கட்டடத்திற்கான அடிக்கல்லைநாட்டியிருந்தார். புதிய கட்டிடத்தின் முக்கிய வேலைகள் இவ்வாண்டுக்குள் பூர்த்தியாக்கப்பட்டுவிடுமென எதிர்பார்க்கப்படுகிறது. (உ)

# நவராத்திரி விழாக்கள்

யாழ்ப்பாணம், வியா.

ஏழாலை மேற்கு உதயசூரியன் அறிவகத்தினர் இன்று சரஸ்வதி பூஜையை சிறப்புடன் கொண்டாடுகின்றனர்.

அறிவகத் தலைவர் திரு ச. சத்தியமூர்த்தி தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் பஜனையுடன் விசேட கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

0 0 0

தெல்லிப்பளை துர்காதேவி ஆலயத்தில் நவராத்திரிவிழா மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

தினமும் அம்பாள் நந்தவனத்தில் வைத்து வசந்த மண்டபத்தில் கொலு வீற்றிருப்பு பூஜை நடைபெறுகின்றது. அம்பிகைக்கு சகஸ்ரநாம அர்ச்சனையும், ஸ்தோத்திரநாராயணம். லலித மஞ்சரி பாராணம் என்பன நடைபெற்று வருகின்றன.

மாவை முருகன்மானம், பூவிற்கு எழுந்தருளிய பின்னர் சங்கீத இன்னிசை நிகழ்ச்சியும் இடம் பெறும்.

0 0 0

யாழ். சட்டநிலையத்தில் வாணிவிழா சிறப்பாகக் கொண்டாடப்படவிருக்கிறது. கலை நிகழ்சிகளில் கவிஅரங்கம், விவாத மேடை, பேச்சுப் போட்டி என்பனவற்றோடு மெல்லிசையும் இன்னிசை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

0 0 0

கொக்குவில் பிடாரிகோவிலடி ராஜி கலைவளர்ச்சி மன்றத்தினால் விஜயதசமி விழா சிறப்பாகக் கொண்டாடப்படவிருக்கிறது.

பலகலைநிகழ்சிகள் மன்றத்தினரின் தயாரிப்பான 'அம்மன் அருள்' என்னும் புராண நாடகமும் இடம் பெறவிருக்கிறது.

0 0 0

யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்திலும், செங்குந்தா இந்துக் கல்லூரியிலும் விஜயதசமி விழா சிறப்பாகக் கொண்டாடப்படவுள்ளன.

அன்றையதினம் ஏடு துவக்கல் முதலான சமய அநுட்டானங்களோடு சமயச் சொற்பொழிவுகளும் இடம் பெறவிருக்கின்றன

ஃ ஃ ஃ

இலங்கை மின்சாரசபை யாழ்ப்பாண டிப்போ ஊழியர்கள் இன்று வியாழக்கிழமை நண்பகல் கலைவாணி விழாவை சிறப்பாகக் கொண்டாடவிருக்கிறார்கள்.

0 0 0

யாழ்ப்பாண மாநகரசபை ஊழியர்கள் யாழ்ப்பாணம் பொதுநூல் நிலையத்தில் வெள்ளிக் கிழமை வாணி விழாவினை சிறப்பாகக் கொண்டாடவிருக்கிறார்கள். யாழ்ப்பாண மாநகரசபை விசேஷ ஆணையாளர் திரு. க. சிவஞானம் தலைமையில் இவ்விழா நடைபெறவிருக்கிறது.

0 0 0

வட்டுக்கோட்டை மூன்றும் பனை வைரவர் ஆலயத்தில் யாழ்ப்பாணக் கல்லூரி மாணவர்களால் இன்று வாணி பூஜை நிகழ்த்தப்பெறும்.

மாணவர் கவுன்சில் நிர்வாகிகள் முன் நின்று நடாத்தும் இவ்விழாவில் நவராத்திரி தத்துவங்களை விளக்கும் சிறப்புச் சொற்பொழிவுகளும் இடம் பெறும்.

0 0 0

மட்டுவில்மகா வித்தியாலயக் கலை மகள் விழாவில் இன்று வியாழக்கிழமை காலை பண்ணிசைச் செல்வன் திரு. எஸ். ஆர். திருநானசம்பந்தனின் பண்ணிசைக் கச்சேரியும் இணுவில், பிரம்ம ஸ்ரீ என். வீரமணி ஐயரின் சொற்பொழிவும், இடம் பெறவுள்ளன.

0 0 0

யாழ். காலர் கல்விக் கழகத்தினர் சரஸ்வதி பூஜையையும் வித்தியாரம்பத்தையும் நாளை வெள்ளிக்கிழமை நடத்துவர்.

0 0 0

கட்டுவன் தெற்கு-பாரதி சனசமூக நிலையத்தில் நவராத்திரிவிழாவில் நாளை கலை நிகழ்ச்சிகள், சொற்பொழிவுகள் என்பன இடம் பெறுகின்றன.

0 0 0

தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் நாளை வெள்ளிக் கிழமை விஜயதசமி விழா சிறப்பாகக் கொண்டாடப் படவிருக்கிறது.

இதனையொட்டி நடைபெறும் கருத்தரங்கில் 'வீரம்' 'செல்வம்' 'கல்வி' என்பன பற்றி முறையே கவிஞர் க. உமாமகேஸ்வரன், புலவர் ம. பார்வதி நாதசிவம், செ. நவரத்தினம் ஆகியோர் சொற்பொழிவு நிகழ்த்துவர்.

என். கே. பத்மநாதனின் நாதஸ்வரக் கச்சேரியும், மாணவர் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

0 0 0

கட்டப்பிராய் கலைமணி சனசமூக நிலையத்தில் இன்று வாணி விழா சிறப்பாக கொண்டாடப்படுகிறது. சிறப்புச் சொற்பொழிவுகள் இடம் பெறுகின்றன.

0 0 0

கொய்யாத்தோட்டம்ஞான செல்வவிநாயகர் ஆலயத்தில் சரஸ்வதி பூசையும் விஜயதசமி விழாவும் சிறப்பாக கொண்டாடப்படவிருக்கிறது.

0 0 0

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியில் நவராத்திரி இறுதி நாளான விஜயதசமி 'சக்தியின் திருவிளையாடல்' என்னும் பொருள்பற்றி வே.சேனாதிராசா உரையாற்றுவார். மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். (உ)

0 0 0

காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் நாளை மாலை மானம்புவிழா நடைபெறுகிறது.

0 0 0

நாளை காரைநகர் இந்துக் கல்லூரியில் நடைபெறும் நவராத்திரி விழாவில் சங்கீதபூஷணம் கே. பொன்னையா சங்கீத பூஷணம் செல்வி ஜெகதாம்பிகை பரமநாதன் ஆகியோரின் இன்னிசையும் சைவமணி மு. சபாரத்தினம் உரையாற்றுவார்.

0 0 0

மட்டுவில்

சாவகச்சேரி மாவட்ட நீதி மன்றத்தில் கொண்டாடப்படும் கலைமகள் விழாவில் சங்கீத பூஷணம் திருமதி மோகனாம்பிகை கணேசனின் பண்ணிசை நிகழ்ச்சியும், செல்வி துஷ்யந்தினி பரராஜசிங்கத்தின் 'சீதாகல்யாணம்' வில்லிசை நிகழ்ச்சியும் இடம் பெறும். மாவட்ட நீதிபதி திரு. கே. பாலகிட்ணர் உட்பட பலர் உரைநிகழ்த்துவர்.

0 0 0

0 0 0

யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் வித்தியாலய நவராத்திரி விழாவில் இன்றுகாலை விசேஷ பூஜையைத் தொடர்ந்து பிரம்ம ஸ்ரீ வை. நித்தியானந்த சர்மா ''கம்பனும் கலைவாணியும்'' என்னும் பொருள் பற்றி இன்னிசை விரிவுரை நிகழ்த்துவார்.

0 0 0

இன்று யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் வாணி விழா வெகு சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இவ் வைபவத்தில் பண்ணிசைக் கலாநிதி எஸ். கே. சிவபாலனின் பண்ணிசைக் கச்சேரி சிறப்பம்சமாக இடம்பெறுகிறது.

0 0 0

வண்ணை மஹா மாரியம்பாள் நவராத்திரி விழாவில் இன்று மாலை 4-30 மணிக்கு மகிடா சூரசம்ஹாரமும். நாளை வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி விளையாட்டு அரங்கிலுள்ள ஞான வைரவர் ஆலயத்தில் அம்பாளின் மானம்பு நிகழ்ச்சியும் 22-ம் திகதி சனிக்கிழமை அம்பாளின் திருவூஞ்சலும், இன்னிசைச் சொற்பொழிவுகளும் இடம்பெறவுள்ளன.

0 0 0

நல்லூர் அண்ணாமலைஇசைத் தமிழ்மன்றத்தால் நாளைமாலை மங்கையர்க்கரசிவித்தியாசாலையில் நவராத்திரி விழா நடாத்தப்படவுள்ளது. பாட்டு, வீணை, வயலின், மிருதங்கம் கற்பதற்குப் புதிய மாணவரும் சேர்க்கப்படுவர். (கா-அ)

0 0 0

யாழ். சுகாதாரசேவை அத்தியட்சகர் அலுவலக ஊழியர்கள் வழமைபோல் இவ்வாண்டும் கலைமகள் விழாவினைக் கொண்டாடவிருக்கிறார்கள். இன்று காலை நடைபெறும் நிகழ்ச்சியில் பூசையின்பின்னர் இந்துசாதனம் ஆசிரியர் நம. சிவப்பிரகாசம் சக்தியின் பெருமை என்பதுபற்றி உரை நிகழ்த்துவார்.

0 0 0

பண்டத்தரிப்பு, வியா

மாதகல் விபுலானந்தர் படிப்பகத்தில் நவராத்திரி விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டுவருகின்றது. மற்றும் சங்கானை மேற்கு சன சமூக நிலையத்திலும் பெரியவிளான் வடசேரிப் பிள்ளையார் ஆலயத்திலும், அளவெட்டி சதானந்தா வித்தியாசாலையிலும் நவராத்திரிவிழா கூட்டுப் பிரார்த்தனை விசேட பூசை என்பனவற்றுடன் விமரிசையாக நடைபெற்றுவருகின்றது. இவ்விடங்களில் இன்று சரஸ்வதி பூசை கொண்டாடப்படும். (அ)

# நவராத்திரி பூஜாகால அமிர்தநைவேத்திய மகிமை

அன்னை பராசக்தியின் விசேஷ விரத தினமாகிய நவராத்திரி பூஜா காலங்களில் பக்தர்களுக்கு மதுபர்க்கம் விநியோகிக்கப்படுவதை எல்லோரும் அறிவார்கள். அதிகமாக பால், தேன், கற்கண்டு இம் மூன்றையும் கலந்து அம்பிகைக்கு நிவேதித்து அதை பக்தர்களுக்குப் பருகக்கொடுப்பது வழக்கம். உக்ரமான தபசில் ஈடுபட்டிருக்கும் அம்பிகைக்கு மதுபர்க்கம் வெப்பத்தைத் தணிக்கிறது.

உண்மையாக மதுபர்க்கத்தில் சேரவேண்டிய பொருட்களைக் காமிகாகமம் விரித்துக் கூறுகின்றது. அதாவது தேன், பால், தயிர், நெய், கருப்பஞ்சாறு, இளநீர், வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம், தேசிப்பழம், பேரிச்சம்பழம், மாதுளம் பழம், ஏலம், குங்குமப்பூ, ஜாதிக்காய், பச்சைக்கற்பூரம், இலவங்கம் இவ்வளவு பொருட்களும் அம்பிகைக்கு நிவேதிக்கப்படும் மதுபர்க்கத்தில் சேர்க்கப்படவேண்டும்.

இந்த மதுபர்க்கத்தைப் பக்தர்கள் உண்பதால் அவர்கட்கு ரோக நிவிர்த்தி, தீர்க்காயுள், செல்வம், சம்பத்து, புத்திரப் பேறு, லட்சுமிகடாட்சம், இல்வாழ்க்கையில் நிறைவான ஆனந்தமெல்லாம் கிடைக்கிறது. ஆனபடியால் பக்தர்கள் நவராத்திரி பூஜாகாலங்களில் அவசியம் இம்மதுபர்க்கத்தை வாங்கிப் பருகி அம்பிகையின் கிருபாகடாட்சத்தைப் பெற்று சுகவாழ்வு வாழ்வார்களாக. ஸ்ரீசக்கர பூஜை நடைபெறும் தேவா ஆலயங்களில் இவ்வமிர்த பானியத்தை விநியோகிப்பதுண்டு.

தா. மகாதேவசர்மா,
சமஸ்கிருத ஆசிரியர்,
தர்மசாஸ்தா குருகுலம்,
இணுவில்.

(அ)

யாழ். ஆஸ்பத்திரியில்

# தாதிகள் தட்டுப்பாட்டால் சத்திரசிகிச்சை பாதிப்பு

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் வழமையாக மேற்கொள்ளப்பட்டுவந்த சத்திர சிகிச்சைகள் நிறுத்தப்பட்டுள்ளதால் நோயாளிகள் பெரும் சிரமத்திற்குள்ளாகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வழமையாக இவ் ஆஸ்பத்திரியில் காலையில் 3 சத்திர சிகிச்சையும் மாலையில் 3 சத்திர சிகிச்சையும் மேற்கொள்ளப் பட்டு வந்ததாகவும், ஆனால் தற்போது அவசர சத்திரசிகிச்சைப் பிரிவு மட்டும் செயற்பட்டு வருவதாகவும் கூறப்படுகிறது.

இந்த ஸ்தம்பித நிலைக்கான காரணம் அண்மையில் ஏற்பட்ட இனக் கலவரத்தால் இங்கு பணியாற்றிய பதினெட்டு சிங்களத் தாதிமார்கள் தங்கள் சொந்த இடங்களுக்கு சென்றதும், பிறஇடங்களிற் பணியாற்றிய தமிழ் தாதிமார்கள் இடம்பெயர்ந்து இங்கு வந்து பணியாற்றி மீண்டும் தாங்கள் பணியாற்றிய பிரதேசங்களுக்குசென்றதாலேயே எனச் சொல்லப்படுகிறது.

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் தற்போது தாதிகள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால் இந்த சிரமநிலை எழுந்துள்ளதாம்.

'ஒக்ஸிஜன் சிலிண்டர்' ஆஸ்பத்திரிக்கு வந்து சேர்வதில் ஏற்பட்டுள்ள தாமதமும் இத நிலைக்கான காரணங்களுள் அடங்கும் எனவும் கூறப்படுகிறது. (கா-உ)

# லயன்ஸ் கழகம் கொண்டாடும் ஐ.நா.தினம்

யாழ்ப்பாணம், வியா

24ம் திகதி யாழ். மத்திய கல்லூரியில் மாலை 6மணிக்கு யாழ்.லயன்ஸ் கழகம் ஐ.நா. தினம் கொண்டாடும். 'மனித உரிமைகள்-இலங்கையும்ஐ.நா சபையும், என்னும் தலைப்பில் திரு.யோகேந்திரா துரைசாமி உரை நிகழ்த்துவார்.

பின்னர் ஐ.நா.பாதுகாப்பு சபையின் மாதிரிக் கூட்டம் ஒன்று நடைபெறும், இதில் 10பாடசாலை மாணவர்கள் பத்து அங்கத்துவ நாடுகளின் பிரதிநிதிகளாகக் கலந்து கொள்வர். திரு.யோகேந்திரா துரைசாமி தலைமை வகிப்பார். திரு எஸ்.செபஸ்தியாம்பிள்ளை பொதுச்செயலாளராகப் பணியாற்றுவார்.

'ஐ.நா.சாஸனத்துக்கமைய உலகத்தில் அமைதியை நிலை நாட்டத் தவறியதற்காக இச் சபை ஐ.நா.வைக் கண்டிக்கின்றது' என்ற தலைப்பில் விவாதம் நடைபெறும்.

# கடமைக்குத் திரும்பினர்

கம்பளை, புதன்

கலவரத்தின்பின் கம்பளையில் கடமையாற்றிய அரசாங்க ஊழியரில் பலர் தமது கடமைக்கு திரும்பி விட்டனர் கம்பளை கலவரத்தினால் பாதிக்கப்படாதிருந்த போதிலும் இப்பகுதி ஆசிரியர்கள் பலர் வேலைக்குத் திரும்பாதிருந்தனர் படிப்படியாக அவர்கள் வேலைக்குத் திரும்பத்தொடங்கியுள்ளனர். (அ)

# கல்லூரிக்கு இருமாடிக்கட்டடம்

மட்டுவில், புதன்

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரிக்கு இரு புதிய 'மாடிக் கட்டிடங்களை அமைப்பதற்காக, அரசாங்கம் ஒரு லட்சத்து இருபத்தி ஓராயிரம் ரூபாவை ஒதுக்கியுள்ளது.


## வரி விளம்பரம்

### தேவை

றிங்கர், லேத்மன், வெல்டர் அனுபவம் உள்ளவர்கள் தேவை. நேரில் வரவும் ராதா மெஷின் கொம்பனி, 95, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். 7444

### விற்பனைக்கு

நல்லநிலையில் உள்ள 22 ஸ்ரீ தொடர்பிலக்கமுடைய மேர்சிடெஸ் பென்ஸ் லொறி விற்பனைக்குண்டு. 249, ஸ்ரீ சதர்ம மாவத்தை, மாளிகாவத்தை, கொழும்பு 10-ல் பார்வையிடலாம். 7451

### வகுப்புகள்

பரதநாட்டிய வகுப்புகள் விஜயதசமியன்று வெள்ளிக் கிழமை தமிழ்நாடு அரசினர் இசைக்கல்லூரியில் பரதக்கலை டிப்ளோமா பட்டம் பெற்ற ஆசிரியையால் ஆரம்பிக்கப் படும். விபரங்களுக்கு: செல்வி அன்னபூரணி முத்துக்குமாரன், ஸ்ரீசண்முகானந்தாபரத நாட்டியப்பள்ளி, 411/2, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 7446

### CLASSES

I. C. M. A, November 1977 exam. Rapid-revision commences on 22-10-77. Saturday 10 A M. The Education Centre, 22, Ramiah Chettiar Lane, Jaffna. 7441

### ஏல விற்பனை

மானிப்பாய் 'வசந்தம்' வே. க. இராசலிங்கம் & சன் அவர்களிடம் 1-1-73தொடக்கம் 31-3-76 வரை வைத்த அடைவு நகைகளில் மீட்கப்படாதவை 19-11-1977 சனிக்கிழமை காலை 9-00 மணி தொடக்கம் மேற்படி கடையில் வைத்து பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

வி. செ குட்டிப்பிள்ளை
ஏலவிற்பனவாளர்.
'இராசகிரி'
643, கே. கே. எஸ் வீதி.
யாழ்ப்பாணம். 7436

### கேள்வி விளம்பரம்

கொக்குவில்

இராமச்சபை

1977ம் ஆண்டுநவம்பர்மாதம் 03ந் திகதி நண்பகல் 12-00 மணிவரை கொக்குவில் கிராமச்சபை விசேட ஆணையாளரால் 1978ம் ஆண்டுக்கு சந்தைக் குத்தகை, இறைச்சி விற்கும் உரிமை, ஆகியவற்றைக் கேள்விமூலம் கொடுப்பதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்பத்திரங்கள் கேள்விக்கிரயமாக ரூபா 10/-ம் (பத்து) கேள்வி வைப்புப்பணமாக ரூபா 25/-ம் (இருபத்தைந்து) செலுத்தி 01-11-1977ந் திகதி பி. ப. 3-00 மணிவரை கிராமச்சபை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். மேலதிக விபரங்களுக்கு அலுவலகத்தில் தொடர்பு கொள்ளவும்.

1. கொக்குவில் ஆடியபாதம் சந்தை.
2. கோண்டாவில் கிழக்கு மீன், மரக்கறி சந்தை.
3. கோண்டாவில் புகையிரத நிலைய சந்தை.
4. கொக்குவில் ஆடியபாதம் ஆட்டிறைச்சிக்கடை.

ந. அமுதசாகரன்
விசேடஆணையாளர்.

கிராமச்சபை,
கொக்குவில்,
17-10-77. 7454


புதிய கட்டிடங்களுக்கான அடிக்கல்லை. கல்லூரி அதிபர் திரு. கே. பாலச்சந்திரன் நாட்டி வைத்தார்.

# பாக்.-இந்திய ஆட்சிமாற்றம்: வெளிநாட்டு சக்தியேகாரணம்

## பூட்டோ குற்றச்சாட்டு

இஸ்லாமாபாத், அக். 19 பாகிஸ்தான், இந்தியாஆகிய நாடுகளின் அண்மைக்கால ஆட்சிமாற்றத்திற்கு வெளி நாட்டுச்சக்தி ஒன்றேகாரண மாக உள்ளது என்று பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் ஜுல்பிகார் அலிபூட்டோவும் குற்றம் சாட்டியுள்ளார்.

கொலைக் குற்றச்சாட்டப்பட்டு நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டுவரும் ஜுல்ப் பூட்டோ பத்திரிகையாளர்களிடம் பேசுகையிலேயே மேற்கண்டவாறு கூறினர்.

பாகிஸ்தான் பொதுத்தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது குறித்து கருத்து தெரிவிக்கையில் அவர் கூறியதாவது:-

பூட்டோ என்ற தனி மனிதருக்காக பாகிஸ்தானின் 6 கோடி மக்களும் தண்டிக்கப் படவேண்டுமா?

இதே வேளையில் அண்மையில் இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் ஆட்சிமாற்றங்களுக்கு வெளி நாட்டுத் தலையீடே காரணம் என்று முன்னாள் இந்தியப்பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தி கூறியிருந்ததும் இக்கூற்றுக்கு இலங்கையும், பாகிஸ்தானும் மறுப்புத் தெரிவித்திருந்ததும் தெரிந்ததே. (இ)

...

## பிரிட்டிஷ் நிபுணர்களின் பங்கு

பொன், அக்.19 கடத்தல்காரரிடமிருந்து மேற்கு ஜெர்மன் விமானத்தில் இருந்த பிரயாணிகளை மீட்ட கொரில்லா எதிர்ப்புப் படையினருடன் இரண்டு பிரிட்டிஷ் நிபுணர்களும் இணைந்து இயங்கினர் என்று பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஜேம்ஸ் கலகன் தெரிவித்துள்ளார்.

இதற்காக மேற்கு ஜெர்மன் அதிபர் திரு. ஸ்மித், திரு. கலகனிடம் நேரில் நன்றி தெரிவித்துக்கொண்டார். (இ)

69--இந்தோனேஷிய சதிப்புரட்சி:

## ஒரு லட்சம் கைதிகளையும் விடுதலை செய்யக் கோரிக்கை

ஜகார்த்தா, அக். 19 இந்தோனேஷிய அரசைக் கவிழ்க்கச் சதிசெய்த குற்றச் சாட்டின் பேரில் சிறையில் அடைக்கப்பட்டுள்ள ஒரு லட்சம் பேரையும் உடன் விடுதலைசெய்யுமாறு சர்வதேச மனிதஉரிமைகள் சங்கம் இந்தோனேஷிய அரசைக் கேட்டுள்ளது.

69-ம் ஆண்டு இடம்பெற்ற சதிப்புரட்சி காரணமாக கைதுசெய்யப்பட்ட ஒருலட்சம் பேரும் இன்று வரை சிறைவைக்கப்பட்டுள்ளனர்.

உலகின் எந்த நாட்டிலும் இவ்வளவு தொகையானோர் சிறையில் அடைக்கப்பட்டதில்லை என்றும் இச்சங்கம் தெரிவித்துள்ளது. (இ)

## கடத்தல்காரரின் சகபாடிகள் உண்ணாவிரதம்

அங்காரா, அக். 19 மேற்கு ஜெர்மன் விமானத்தைக் கடத்திய கடத்தல்காரர் சுட்டுக்கொலை செய்யப்பட்டதைக் கேள்வியுற்ற துருக்கி சிறையில் இருக்கும் இரண்டு பாலஸ்தீனியர்களும் உண்ணாவிரதம் இருந்துவருகின்றனர்.

விமானக் கடத்தல்காரர் மேற்கு ஜெர்மன் சிறையில் உள்ள 11 கைதிகளுடன் மேற்படி இருவரையும் விடுதலைசெய்யுமாறு கோரியிருந்தனர். (இ)

## "புதிய ரஷ்ய அரசியலமைப்பு வரலாற்றின் புதிய கட்டம்"

மாஸ்கோ, அக். 19 "எமது புதிய அரசியலமைப்பு நிறைவேறியதுடன் சோவியத் வரலாற்றில் புதியதொரு கட்டம் ஆரம்பமாகின்றது. நாம் ஆக்கியுள்ள இப்புதிய அடிப்படைச் சட்டங்கள் வெறும் காகிதக் கட்டு அல்ல. இதன் ஒவ்வொரு ஷரத்தும், ஒவ்வொரு ஏற்பாடும் இன்று முதல் நடைமுறையில் செயல்பூர்வமாக அமுல்படுத்தப்படவேண்டியன ஆகும்."

இவ்வாறு சோவியத் நாடாளுமன்றத்தில் புதிய சோவியத் அரசியலமைப்பு நிறைவேறியதைத் தொடர்ந்து பேசிய சோவியத் ஜனதிபதி திரு. லியோனித் பிரெஷ்னேவ் கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது: "சோவியத் மக்கள் எமக்களித்த உரிமையாற்றலுக்கு அமையவே இந்த அரசியலமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இது கம்யூனிஸத்தை நோக்கிய எமது பயணத்தில் ஒரு புதிய வரலாற்று முக்கியத்துவம் மிக்க கட்டத்தை அரசியல் சட்ட ரீதியில் குறித்து நிற்கின்றது. சோஷலிஸ ஜனநாயகத்தை மேலும் வியாபிதப்படுத்தவும் ஆழமாக்கவும் இப்புதிய அரசியல் சட்டம் எமக்கு ஒரு கருவியாகத் துணை நிற்கும்.

"இப்புதிய அரசியலமைப்பின் நகல் ஆராயப்பட்டும், விமர்சிக்கப்பட்டும் வந்த கடந்த நான்கு மாத காலத்தில் மக்களின் ஆர்வமிக்க அரசியல் இயக்கத்தை நாம் கண்டோம். இவ்வாறன அரசியல் இயக்க வேகத்தை குன்றாமல் பேணுவது நமது கடமை.

"புதிய வரலாறு படைக்கும் எமது மக்களுக்கு ஒவ்வொரு வகையிலும் உதவுவதே எமது அரசியலமைப்பின் சாராம்சமாகும்." (இ)

## "தெங்கு, பனம்பொருள் சங்கங்கள் அஞ்சத் தேவையில்லை"

### — உடுப்பிட்டி எம். பி.

யாழ்ப்பாணம், வியாழன் "வடபகுதியில் இயங்கிவருகின்ற தெங்குபனம் பொருள் கூட்டுறவுசங்கங்களின் எதிர்காலம் பற்றி சீவல் தொழிலாளர்கள் கவலையுறத்தேவையில்லை. தொடர்ந்தும் கூட்டுறவு முறையே அமுலில் இருக்கும் என அமைச்சர் எனக்கு உறுதியளித்துள்ளார்" இவ்வாறு பருத்தித்துறை சித்தி விநாயகர் கல்லூரிமண்டபத்தில் நடைபெற்ற வடபகுதி தெங்கு பனம் பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச்சங்க அங்கத்தவர் சம்மேளனத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்துப் பேசுகையில் உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராஜலிங்கம் தெரிவித்தார்.

அவர்மேலும் பேசுகையில் சிறுபான்மை சமூகத்தின் பொருளாதாரத்தையும் எதிர்கால வளத்தையும் பேணிக்காக்கும் வகையில் சகல வடபகுதி தேசியப் பேரவை உறுப்பினர்களும் கடமையாற்ற முன்வந்துள்ளனர். இதையிட்டு சீவல் தொழிலாளர் சமூகம் மகிழ்ச்சியடைய வேண்டும்" எனவும் குறிப்பிட்டார்.

திரு. சி. தம்பிமுத்து தலைமை தாங்கினர் சங்கப்பிரமுகர் ஆசிரியர் திரு.க. நடராசா பேசுகையில், சீவல் தொழிலாளர் சமூகத்தின் முன்னேற்றத்தில் அக்கறை இல்லாதவர்களும் ஊழல் பேர்வழிகளும் அரசியல் காரணத்துக்காக தலைவர்களாக நியமிக்கப்பட்டமையினாலே சங்கங்கள் இன்று கீழ் நிலையை நோக்கிச் செல்ல வேண்டியுள்ளன. அத்துடன் இச்சங்கங்களுக்குப் பொறுப்பாக விருந்த கூட்டுறவு அதிகாரியின் அசமந்தப்போக்குமே காரணமாகும் நான்குலட்சம் சிறுபான்மைத்தமிழ் மக்களின் பொருளாதாரவளத்துக்கு மூலகாரணமாக விளங்கும் இச்சங்கங்களை எப்படியும் பாதுகாத்தே தீருவோம்" என்றார்.

பருத்தித்துறை தேசியப் பேரவை உறுப்பினர் திரு க. துரைரத்தினம் பேசுகையில், கூட்டுறவு ஊழல்களில் ஈடுபடுபவர்கள் கூட்டணியைச் சேர்ந்தவர்களாகவிருந்தாலும் கூட அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கத் தயங்க மாட்டேன் என்று கூறினர்'

(5ம் பக்கம் பார்க்க)

## மங்களாதேஷ் புரட்சிக்கு இந்தியாவும் காரணமாம்

### வாஜ்பாய் ஆட்சேபம்

டாக்கா, அக். 19 இம்மாதம் முற்பகுதியில் பங்களாதேஷில் நடைபெற்று தோல்வியுற்ற சதிப்புரட்சியில் இந்தியா முதலிய வெளிநாடுகளுக்கும் பங்குண்டு என்று பங்களாதேஷ் அரசு குற்றஞ் சாட்டியுள்ளது.

ஜப்பானிய கடத்தல் விமானம் டாக்கா விமான நிலையத்தில் தங்கியிருந்தபோதுஇந்தப்புரட்சி ஏற்பட்டு தோல்வியுற்றது.

இச்சதி தொடர்பாக விசாரணை செய்வதற்காக உயர் நீதிமன்ற நீதியரசர்கள் தலைமையிலான கமிஷன் ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

### தடுப்புக்காவல்

இதேவேளையில் பங்களாதேஷில் கடந்தவாரம் தடை செய்யப்பட்ட மூன்று கட்சிகளில் ஒன்றான கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவரும், செயலாளரும் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

### இந்தியா ஆட்சேபம்

பங்களாதேஷ் புரட்சிக்கு இந்தியாவுக்கும் பங்குண்டு என்று பங்களாதேஷ் குற்றம் சாட்டியுள்ளதை இந்தியா வன்மையாகக் கண்டித்துள்ளது.

இந்திய வெளிநாட்டமைச்சர் திரு. ஏ. பி. வாஜ்பாய் தமது ஆட்சேபத்தைபுதுடில்லியில் உள்ள பங்களாதேஷ் தூதுவரிடம் நேரில் தெரிவித்தார். (இ)

## "எம். ஜி. ஆர். சாமர்த்தியசாலி; மக்களின் அன்புக்கு உரியவர்"

### அமைச்சர் சாந்திபூஷண் பாராட்டு

சென்னை, அக். 19 'தமிழ்நாட்டின் முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் சாமர்த்தியசாலி, நிர்வாகம் செய்யத் தெரிந்தவர்' என்று பாரத சட்ட மந்திரி திரு சாந்தி பூஷண் புகழ் மாலை சூட்டியுள்ளார்.

திரு. எம். ஜி. ஆர். பற்றி அவர் தமது கருத்தைக் கூறுகையில் 'அவருடன் சற்று நேரந்தான் பேசிப் பழகியிருக்கிறேன். அவரைப் பற்றி அதிகமாக எனக்குத் தெரியாது. ஆனல் அவருடன் பேசிப் பழகிய அந்தக்கொஞ்ச நேரத்தில் எனக்கு ஏற்பட்ட கருத்து, அவர் சாமர்த்தியசாலி, நிர்வாகம் செய்யத் தெரிந்தவர் என்பதுதான்.

'அதுமட்டுமல்ல நடிகரானல் என்ன? வேறுயாராக இருந்தாலும் என்ன? பொதுமக்களின் அன்புக்கும் ஆதரவுக்கும் அருகதையானவர் என்பதை அவர் தேர்தலில் நிரூபித்துக் காட்டிவிட்டார்; முதல் மந்திரிப்பதவி வகிக்கின்றார். மெச்சவேண்டியதுதான்.' (உ)

## உலக நாடுகளின் 'அபரிமித' உதவியுடன் நிதிமந்திரி நாடுதிரும்பினர்

கொழும்பு, புதன் நிதிஅமைச்சர் திரு. ரொனி டி.மெல் பல உலகநாடுகளிலும் சர்வதேச நாணயநிதிச் சபை, உலக வங்கி ஆகியவற்றிடமிருந்து இலங்கைக்கு என்றுமில்லாத வகையில் பெருமளவு உதவிகளைத் திரட்டிக் கொண்டு நேற்று நாடு திரும்பியுள்ளார்.

நேற்று அதிகாலை கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்த நமது நிதி அமைச்சருக்கு பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது.

விமானநிலையத்தில் அமைச்சர்கள், எம். பி.க்கள், ராஜதந்திரிகள் உட்பட பெருந்திரளான மக்களும் கூடி நின்று வரவேற்பளித்தனர்.

வாஷிங்டனில் நடைபெற்ற உலக வங்கி, சர்வதேச நிதிச் சபைக் கூட்டங்களில் கலந்து கொண்ட திரு. மெல் அமெரிக்கா, பிரிட்டன், மேற்கு ஜெர்மன், ஜப்பான், முதலிய நாடுகளின் அரசாங்கங்களுடன் பேச்சு நடத்தியதன் பயனுக இலங்கைக்கு இப்பெருந் தொகை உதவிகிடைக்க உள்ளன.

இலங்கையில் நிறுவ உத்தேசிக்கப்பட்டிருக்கும் "சுதந்திர வர்த்தக வலயம்" பற்றி திரு ரொனி டி.மெல் வெளிநாடுகளுக்கு விரிவாக எடுத்துக் கூறியதன் பயனுக பல உலக நாடுகளுக்கு இலங்கையில் முதலீடுசெய்வதற்குபெரும்ஆர்வம் ஏற்பட்டுள்ளது என்று அரசியல் வட்டாரத்தில் கணிக்கப் படுகிறது. (இ)

## கொப்பி தட்டுப்பாடு

மாவிட்டபுரம், புதன் வலி. வடக்குப் பகுதியில் அப்பியாசக் கொப்பிகளுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுவதால் மாணவர்கள் பெரிதும் கஷ்டமுறுகின்றார்கள். (அ)

## "இலங்கைக்கு உதவுவதில் உலக நாடுகள் மிகுந்த அக்கறை"

கொழும்பு, புதன் 'சர்வதேச நாடுகள் இலங்கைக்கு என்றுமில்லாத வகையில் உதவி செய்ய முன்வந்துள்ளது' என்றுநாடு திரும்பியநிதிஅமைச்சர் திரு. ரொனி டிமெல்தெரிவித்தார்.

நிதி அமைச்சர்திரு. ரொனிடி மெல் பத்திரிகையாளரிடம் பேசுகையிலேயே மேற்கண்டவாறு கூறினர்.

'கடந்த அரசாங்கம், திட்டங்கள் எதுவுமின்றி பொறுப்பற்ற முறையில் நடந்து கொண்டமையினலேயே நாட்டில் பொருளாதார நெருக்கடி மோசமாகியது' என்றுகூறிய அமைச்சர் திரு. மெல் மேலும் கூறியதாவது:

### அரசில் திறமைசாலிகள்

'நமது இன்றைய அரசில் திறம்பட செயலாற்றக் கூடிய திறமைசாலிகள் இருக்கிறார்கள் என்பது உலக நாடுகளில் இப்போது பிரசித்தமாக உள்ளது.

எமது பிரதமர் திரு. ஜெயவர்த்தனவினதும் ஐக்கிய தேசியக் கட்சியினதும் கொள்கைகளை உலக நாடுகள் நன்கு புரிந்து கொண்டுள்ளன.

நமது நாட்டில் அமைய இருக்கும் சுதந்திர வர்த்தக வலயத்தில் முதலீடு செய்ய உலக நாடுகள் பலவும் மிகுந்த அக்கறை காட்டுகின்றன'. (இ)

# சிங்களப் பகுதியிலிருந்துவடக்குவந்த அகதிகளைத் திருப்பிஅனுப்புகின்றனர்

## மாடசாமி ஒருமுகாமில்; மனைவி வேறுமுகாமில்

முகாம்களில் உள்ள அகதிகள், இரவோடு இரவாக பஸ்களில், வேறுஇடத்திற்குஅனுப்பப்படவிருக்கிறார்கள். அகதிகள் முகாம்களில் இப்படியான ஒருகதைபலமாகப் பேசப்பட்டு வருகிறது.

நான் பண்ணை முகாமிற்குச் சென்ற சமயம், இந்தக் கதையை உறுதிப்படுத்தும் வித்தில் அகதிகள், சில விபரங்களைத் தெரிவித்தனர். சில உத்தியோகத்தர்கள் வந்து தங்களிடம் நேரில்'முகாமிலிருந்து செல்லத்தயாராக இருங்கள்' என்று கூறியதாகச் சொன்னார்கள்

இந்த அச்சத்தின் காரணமாக நூற்றுக்கு மேற்பட்ட அகதிகள், முகாமை விட்டுத் தங்கள் சொந்த விருப்பத்தின் பேரில் வெளியேறி விட்டார்கள்

பண்ணை முகாமில் ஆரம்பத்தில் 175 அகதிகள் இருந்தனராம். தற்போது 75 பேர் மட்டுமே இருக்கின்றனர். மற்றையோர், மீண்டும் தங்கள் சொந்த இடங்களான மாகோ, எம்பிலிப்பிட்டியா, பொலநறுவை முதலிய இடங்களுக்குச் சென்றுள்ளனர். இவர்கள் எல்லாரும் இந்திய வம்சாவளியினர்; இலங்கைப்பிரஜைகளல்லாதவர்கள்.

மிகுதியாக இருக்கும் 75பேரிலும், 4குடும்பங்கள், இந்தியா செல்வதையே விரும்புகின்றன. இவர்கள் மாகோவிலிருந்து வந்தவர்கள். இவர்களில் சிலர் இலங்கைப்பிரஜாவுரிமை பெற்றுள்ளனர். வடக்கில் புனர்வாழ்வு கிடைக்குமென்ற நம்பிக்கையை இழந்துவிட்டார்கள். இவர்களில் வி.மாடசாமி என்பவரும் ஒருவர். இவரது குடும்பத்தில் மொத்தம் 11பேர். இவர் ஒரு சாரதி. வயதுவந்த 3பெண்பிள்ளைகள், கொழும்பில் உறவினருடன் இருக்கின்றனர். இவருடைய சகோதரரின் குடும்பத்தில் 8 பேர். இவர்கள் எல்லோரும் இந்தியா செல்லவிரும்புகின்றனர். இந்தியா செல்லவிரும்பும் மற்றொரு குடும்பத்தில் 10பேர் இவர்களில் பலரும் இலங்கைப் பிரஜாவுரிமை பெற்றவர்கள் எனத்தெரிகிறது.

எதற்காக இந்தியா செல்ல விரும்புகிறீர்கள் என்று கேட்டேன்.

''மீண்டும் எங்களை மாகோவில் கொண்டு போய்விடப் போகின்றார்களாம். மாகோவில் போய் வாழமுடியாது. அதனால்தான் இந்தியா போக முடிவுசெய்தோம்''

''அரசு இங்கு காணிவழங்கினால் இருப்பீர்களா?''

''இலங்கைப் பிரஜைகளுக்குத்தான் காணி கிடைக்கும் என்று சொல்கிறார்கள்! எங்களில் எல்லாருக்கும் இலங்கைப் பிரஜாஉரிமை இல்லை. அதனல் எல்லாரும் இந்தியாபோய்விட்டால் நல்லது என நினைக்கின்றோம்''.

''கலவரத்தின் போது உங்களுக்குஎன்னநடந்தது?'' என்று கேட்டேன்.

''கலவரம் தொடங்கியதும் எங்கள் வீடுகளுக்கு நெருப்பு வைத்துவிட்டார்கள். அதனல் வந்து விட்டோம்'' என்றார் மாடசாமி.

''சொந்தவீடுகளா?''

''ஆமாம், நாங்கள் 18 வருடங்களுக்கு முன் மாகோ போனோம். எல்லாம் ஒரே காடாக இருந்தது. நாங்கள் காடுகளை வெட்டிக் குடியேறினோம். காணிகள் எல்லாம் சோலைகளாகவுள்ளன. கல்வீடுகள்.''

''எத்தனைகுடும்பங்கள் இருந்தீர்கள்?''

''நாங்கள் 5 குடும்பங்கள் இருந்தோம், ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒன்றேகால் ஏக்கர் காணி இருந்தது. அதில் வீடு கட்டி இருந்தோம்''.

''என்ன பயிர்கள் செய்தீர்கள்?''

''தென்னை, மா, பலா மரங்கள் உண்டு''

### அகதிகளுடன் ஒரு சந்திப்பு: கா. யோகநாதன்

பண்ணை முகாமிற்கு என்னுடன் நண்பர் 'சபா'வும் வந்திருந்தார். எங்களைச் சுற்றி அத்தனைபேரும் கூடிவிட்டார்கள். நண்பர் சபா, அவர்களிடம் கேள்விகள் கேட்டுக்கொண்டிருந்தார்.

''எல்லா வீடுகளும் எரிந்துவிட்டனவா?'' என்று கேட்டேன்.

''ஐந்து வீடுகளும் எரிந்து சாம்பலாகிவிட்டன. பொருட்கள் எல்லாம் சாம்பலாகிவிட்டன'' என்று மாடசாமியின் உறவினரான ஆர். நாகம்மா என்ற பெண் கரகரத்தகுரலில் சொன்னார்.

''அதில் இரண்டு கல்வீடுகள்'' என்று மாடசாமி கூறினார்.

''காணி ஏதாவது இங்கு கிடைத்தால், இந்தியாபோகாமல் இங்கேயே இருந்துவிடுவோம்'' என்றுமாடசாமியின் மனைவி சொன்னார்

பண்ணை முகாமில் இருந்த சில குடும்பங்களுக்குச் சிலர் தமது காணியில் குடியேற்றி வேலையும் வழங்கியுள்ளார்கள்.

யாழ். பொலிகிளினிக் உரிமையாளர் டாக்டர் எஸ். சேனாதிராசா, மருதனாமடத்திலுள்ள தமது காணியில் இங்குள்ள அகதிகள் குடும்பமொன்றைக் குடியேற்றியுள்ளார். அவர்களுக்கு மாதாமாதம் 175 ரூபா கொடுக்கவும் முன்வந்துள்ளார். 18 பரப்பைக் கொண்ட இக்காணியில் வீடு கிணறு எல்லாம் உண்டு. அந் நிலத்தில் பயிர் செய்து வருமானத்தையும் எடுக்குமாறு அவர் கூறியுள்ளாராம். இக் குடும்பத்தினருக்குஒருகுழந்தை மட்டும் தான் உண்டு

வைத்திலிங்கம் கம்பெனி உரிமையாளரும் இதேபோல இரு குடும்பங்களைத் தமது காணியில் குடியேற்றி, அவர்களுக்கு வேலையும் வழங்கியுள்ளார். இதேபோல்மற்றும்சிலர் தங்கள் தென்னந் தோட்டங்களில் சில குடும்பங்களைக் குடியேற்றியுள்ளனர்.

சில குடும்பங்கள், தங்கள் சொந்த விருப்பத்தின்பேரில் பணத்தைப் பெற்றுக் கொண்டு முகாமைவிட்டு வெளியேறி யாழ்ப்பாணத்தில் வாடகை வீடுகளிலிருந்து வருகிறார்கள். இவர்கள் கூலி வேலைசெய்து வருகின்றார்கள்.

### சகோதரர் பாலகிருஷ்ணன்

பண்ணை மாணவர் தர்ம இல்லத்தில் அமைந்துள்ளமுகாமிற்கு சகோதரர் பாலகிருஷ்ணன் பொறுப்பாக இருக்கின்றார். இவர் அகதிகளுடன் அன்பாகப் பேசி அவர்கள் குறைகளை உடனுக்குடன் அறிந்து அவற்றைத் தீர்த்து வைத்துள்ளார்.

### முகாமில் தெய்வீக ஒளி

இந்த முகாமில் தெய்வீக ஒளி வீசுகின்றது. எங்கும் ஒரே அமைதி. ஆண்டவன் சந்நிதானம்போல் காட்சியளிக்கிறது. மண்டபத்தின் நடுவே நடராஜப்பெருமானின் ஆனந்தத் தாண்டவக் காட்சி வரவேற்கின்றது. அதைத் தொடர்ந்து மண்டபத்திலும் சிவனின் திருஉருவம் காட்சிதருகின்றது. அங்குதான் பெண் அகதிகள் தங்கியிருக்கின்றார்கள்.

இந்த மாணவர் தர்ம இல்லத்தில் 26 அநாதைச் சிறுவர்களை சகோதரர் பாலகிருஷ்ணன் பராமரித்து வருகிறார். அச்சிறுவர்களும் அகதிகளுக்குத் தேவையான சிறுசிறு உதவிகளைச் செய்துவருகின்றனர்.

### பெருந்தொகை உடைகள் தானம்

இந்த முகாமிற்குத்தான் பொதுமக்கள் பெருந்தொகையாக உடைகள் வழங்கியிருக்கிறார்கள். அகதிகளுக்கு வழங்கி மிச்சமாகவுள்ள உடைகள் வரவேற்பு அறையில் வைக்கப்பட்டிருக்கிறது,

திருமதி சோமா சண்முகலிங்கம் வாரத்தில் இரண்டு மூன்று தினங்கள் வந்து அங்குள்ள உடைகளை அகதிகளுக்கு ஏற்றவாறுவழங்குவாராம் காலையில் அகதிகளுக்குத் தோசை அல்லது பாண் வழங்கப்படுகிறது. நண்பகல் சோறு இரவு பாண்வழங்கப்படுகிறது. சமூகசேவை இலாகா இதற்கான உதவிகளைச் செய்து வருகிறது. அகதிகள் முகாமிலுள்ள குழந்தைகளுக்கு பால் உணவு வழங்கப்படுகிறது.

### தமிழ் பேசத் தெரியாதவர்கள்

முகாமில் உள்ள சிலருக்கு தமிழ் சரியாகப் பேசத் தெரியாமலிருக்கிறது. இவர்கள் பலகாலமாகத் தென்பகுதியில் வாழ்ந்துவந்த காரணத்தால் தமிழ்மொழியைப் பேசமுடியாமல் கஷ்டப்பட்டார்கள். சிலரின் உடைகள் தமிழ்க்கலாசாரத்தைப் பின்பற்றியதாக இருக்கவில்லை. சிலர் பெயர்கள்கூட தமிழ்ப்பெயர்களாக இருக்கவில்லை. அவர்களின் பெயர்களில் கடைசியில் (ம்) மைக்காணமுடியாமலிருந்தது. பழக்கவழக்கங்கள்கூட மாறுபட்டதாக உள்ளது.- இவர்கள் தம்பிலிப்பிட்டியா, குருநாகல், கொருவல போன்ற இடங்களிலிருந்து வந்துள்ளார்கள்.

### 1800 பேரில் நால்வரே தமிழர்

பொலநறுவையிலிருந்து எம். பெருமாள் என்பவர் வந்திருந்தார். இவர் அங்கு விவசாயப்பண்ணையொன்றில் வேலைபார்த்து வந்தவர். இலங்கைப் பிரஜா உரிமை கோரி விண்ணப்பித்திருக்கிறார். அந்தப் பண்ணையில் 1800 பேர் வேலைசெய்கின்றார்கள். அவர்களில் நான்கு குடும்பங்கள் மட்டும்தான் தமிழ்க் குடும்பங்களாம்.

முதலில் சீனிக் கூட்டுத்தாபனத்தில் இவர் மாதம் 350 ரூபா சம்பளத்தில் வேலை பார்த்துவந்தார். பின் விவசாயப் பண்ணையில் சேர்ந்துகொண்டார். பயத்தின்காரணமாக இங்கு வந்ததாகச் சொன்னார். இவர் திருமணமானவர், பிள்ளைகள் இல்லை.

### கணவன் மனைவி வெவ்வேறு முகாம்களில்

கலவரத்தின்போது பெருமாள் விவசாயப்பண்ணையில் இருந்தார். பயத்தினால் இவரின் மனைவியும் மாமியும் முதலிலேயே பொலிஸ் நிலையம் சென்றுவிட்டார்கள். அவர்கள் முதலில் அகதிகளாக யாழ்ப்பாணம் வந்தார்கள். இரு தினங்கள் காட்டில் ஒளித்திருந்த பின்னரே இவர் பொலிஸ் நிலையம் சென்று அகதியாக இங்கு வந்தார்கள்.

உங்கள் மனைவியைச் சந்தித்தீர்களா?

கலவரத்தின்பின் என் மனைவியைச் சந்திக்கவே இல்லை.

இப்போது உங்கள் மனைவி எங்கிருக்கிறார்?

அச்சுவேலி முகாமில் இருப்பதாக அறிந்தேன். ஆனால் போய்ச் சந்திக்கமுடியவில்லை.

மனைவிக்கு என்ன பெயர்?

பார்வதி.

அச்சுவேலிக்குப்போய்ச் சந்திக்க முயற்சிக்கவில்லையா?

இந்த முகாமை விட்டுப் போகமுடியாமலிருக்கிறது.

என்ன செய்ய முடிவுசெய்திருக்கிறீர்கள்?

வடபகுதியில் காணியொன்று கிடைத்தால் விவசாயம் செய்யலாம்.

### செவிக்கு அடிக்கடி விருந்து

அகதிகளுக்கு வயிறார உணவு மட்டுமல்ல, அடிக்கடி செவிக்கும் உணவு அளிக்கப்படுகிறது

இசைமணிகள் ஞானமூர்த்தி பஞ்சமூர்த்தி சகோதரர்கள்

## யாழ். லயன்ஸ் கழக சரஸ்வதிபூஜை

யாழ்ப்பாணம், வியா

திருநெல்வேலி முத்துத்தம்பி அநாதைகள் இல்லத்தில் இன்று மாலை 6-30 மணிக்கு சரஸ்வதி பூசை கொண்டாடப்படவிருக்கிறது

யாழ். லயன்ஸ்கழக ஆதரவில் நடைபெறவிருக்கும் இவ் விழாவில், வித்துவான் சி. ஆறுமுகம் உரை நிகழ்த்துவார். கண்ணன் கோஷ்டி உட்பட பல இசை நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

அன்றைய தினம் அநாதைச் சிறுவர்களுக்கு, உணவு அன்பளிக்க விரும்புவோர், 'யாழ் லயன்ஸ்கழகச் செயலாளர் திரு. ஜோசப், இலோன் மேர்ச்சன்ஸ் லிமிட்டெட், 484 ஆஸ்பத்திரிவீதி யாழ்ப்பாணம்' என்ற விலாசத்தில் தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகோள் விடப்பட்டுள்ளது. [க-அ]

---

இருநாள் அகதிகளுக்கு உணவு வழங்கியதுடன் அருமையான நாதஸ்வர விருந்தும் இருதினங்களும் அளித்தார்கள்.

லியோ கிளப்பினர் அகதிகளுக்கு ஒருதினம் நண்பகல் உணவு அளித்ததுடன் ஒரு நாள் சிரமதானத்தின் மூலம் முகாமைக் கழுவிச் சுத்தம் செய்தார்கள். றோட்டரிச் சங்கத்தினரும் லயன்ஸ் கழகத்தினரும் அகதிகளுக்குத் தேவையான உதவிகளைச் செய்துள்ளனர்.

கொட்டடி மக்கள் ஒருதினம் நண்பகல் உணவுப் பார்சல்களை அகதிகளுக்கு வழங்கினார்கள். வ.ர்மதி சனசமூக நிலையத்தினர் பெருந்தொகையான உடைகளை வழங்கியதுடன் உணவும் அளித்தார்கள். ஆறுகால்மடம் அறிவொளி சனசமூக நிலையத்தினரும், உதவியளித்துள்ளார்கள். இப்படியாகப் பல மன்றங்கள், சங்கங்கள், தனிப்பட்டவர்கள், அகதிகளுக்குத் தினமும், அன்பளிப்பு செய்துவருகின்றார்கள். யாழ். சைவமகளிர் மன்றத்தின் சார்பிலும் நிகழ்ச்சி நடத்தப்பட்டது. மில்க்வைற் அதிபர் திரு. க. கனகராசா தலைமையிலும் இசை நிகழ்ச்சி இடம்பெற்றது. (க-அ)

## கப்பல் மீட்பு

கொழும்பு, புதன்

கொழும்புத் துறைமுகத்துக்கு சீனாவில் இருந்து அரிசி ஏற்றிவந்தபோது மூழ்கவிருந்த கப்பல், கப்பல் உத்தியோகத்தர்களின் தீவிர நடவடிக்கைகளால் மீட்கப்பட்டது.

கௌலோலா என்ற இந்த சிங்கப்பூர் கப்பலில் 2,600 தொன் அரிசி இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டது.

கப்பலின் முதலாம் தளத்தில் ஏற்பட்ட சிறுவெடிப்பால் நீர் கப்பலுள் புகுந்தது. இதனால் கப்பல் மூழ்கும் நிலை ஏற்பட்டது.

இதனையடுத்து கப்பலில் இருந்த 800 தொன் அரிசி கடலில் வீசப்பட்டு, கப்பல் மீட்கப்பட்டது. (உ)

## வட்டு.எம்.பி. குணமடைகிறார்

பண்டத்தரிப்பு, புதன்

சுகவீனமுற்றுக் கொழும்பில் தங்கி சிகிச்சை பெற்றுவரும் வட்டுக்கோட்டைத் தொகுதி எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு இம்மாத இறுதியில் தமது தொகுதிக்கு மீண்டும் வருவார் என்று தெரியவருகின்றது.

இருதய நோயினால் பாதிக்கப்பட்டு கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றில் அனுமதிக்கப்பட்டிருந்த திரு. திருநாவுக்கரசு இப்போது அங்கிருந்து வெளியேறி தமது கொழும்பு, காலி வீதியிலுள்ள வாசஸ்தலத்தில் மருத்துவ கண்காணிப்பில், இருந்துவருகிறார். (அ)

## சீனி தொழிற்சாலை மூடப்பட்டது

பண்டத்தரிப்பு, புதன்

சண்டிலிப்பாயிலுள்ள உடுவில் தொகுதி கூட்டுறவு அபிவிருத்திச் சங்கத்தினால் நடத்தப்பட்ட பதநீரிலிருந்து சீனி தயாரிக்கும் தொழிற்சாலை மூடப்பட்டுள்ளது.

இத் தொழிற்சாலை பலத்த நஷ்டத்தில் இயங்கிவந்துள்ளதே இதற்குக் காரணமாகும். இதனால் இத் தொழிற்சாலையில் கடமையாற்றி வந்த பல ஊழியர்கள் வேலையிழந்துள்ளார்கள். தமக்கு நிவாரணம் வழங்குமாறு கோரி இந்த ஊழியர்கள் யாழ். மாவட்ட அரசாங்க அதிபருக்கு மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளார்கள். (இ)

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## சரணம் அபீராமித்தாயே

அன்னையே விண்டொட்டு மண்வரையுமுள்ள பெருமைம்பூத முள்ளடக்கி
நன்மறைகள் நான்கிற்கு மடையாளமான திருவடிகளைக் கொண்டதேவி
உன்றிறன்றன்னினுயர்ந்திடும் வீரமதை உழைப்பினுற் பெற்றுய்யவும்
கன்னமிட்டேகினுங் குறையாத செல்வமொடு கயமையில் வாழ்வெய்தவும்
மன்னருங் கண்டு நிதம் வாழ்த்துங் கலைஞானம் மலைத்தமைச் சேரவும்
பன்னெடுங்காலமுதல் பலவாயுனூறு முறை பலவுமே யொன்று சேர்த்துத்
தன் அன்பினுற் பரவிடும் அடியார்க்குப் பரிவினுல் தவறாது நீகூட்டும்
சங்கரி ஈஸ்வரி சூலினி வாராகி சரணம் அபிராமி தாயே.

— எழினி சி. சிவநாதபிள்ளை

**Regal** (Jaffna)
Daily at 4-45 7-00 & 9-30 p. m only
The long awaited full length documentary on the wonders of Colourful fascinating undersea world of the deep oceans in the glory of Eastman Colour.
**The Great Barrier Reef**
A must film for School children பள்ளிக்கூடப் பிள்ளைகள் பார்க்கவேண்டிய படம்.
முன்கூட்டியே தொடர்பு கொள்ளவும். போன்: 360

**மனோஹரா** எம். ஜி. ஆர். - லதா-நாகேஷ்
(யாழ்ப்பாணம்) அறிமுகம் பவானி
தினசரி மு.ப. 10-30 பி.ப 2-30 6-30, 9-45
நடித்த
**உழைக்கும் கரங்கள்**
(ஈஸ்ட்மன் கலர்)

**வெலிங்டன்** (யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
**துணிவே துணை**

**ரியோ** போன்; 7693
(யாழ்.நகர்)
காலை 7-00 மணிக்கு காட்சி ஆரம்பமாகும்.
காட்சிகள் தொடர்ந்து காண்பிக்கப்படும்.
எம். ஜி. ஆர். — லதா நடித்த
**நீதிக்கு தலைவணங்கு**

**வின்ஸர்** தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
(யாழ்ப்பாணம்) சிவாஜி, மஞ்சுளா, தேவிகா, கமலஹாசன், ஜெயசித்ரா நடித்த
**சத்யம்**
(ஈஸ்ட்மன் கலர்)

**ஸ்ரீதர்** தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
(யாழ்ப்பாணம்) சிவகுமார்-சுஜாதா-ஸ்ரீகாந்த் நடித்த
**அன்னக்கிளி**

**ராணி** ஜெய்சங்கர் - பத்மினி - லக்ஷ்மி
(யாழ்ப்பாணம்) முத்துராமன் - நாகேஷ் - சச்சு
தினசரி காலை 10-30, பிற்பகல் 2-30, 6-30, 9-30
தேவரின்
**பெண் தெய்வம்**

**சாந்தி** தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
யாழ். நகர் திலிப்குமார் பிருத்விராஜ்கபூர் மதுபாலா
போன்: 7642 நடித்த
**அக்பர்**
24-10-77 முதல்
**'FIVE CRAZY BOYS'** (Color)

அனுராதபுரம் ரயில்வே சுப்பிரிண்டன்

# அமைச்சருடன் ஏற்பட்ட உடன்பாட்டை மீறினராம்

யாழ்ப்பாணம், வியா

பாதிக்கப்பட்ட புகையிரத ஊழியர்கள் தொடர்பாக போக்குவரத்து அமைச்சருடன் செய்துகொண்ட உடன்பாடுகளை அனுராதபுரம் மாவட்ட ரயில்வே சுப்பிரிண்டன் மீறிவிட்டார் என்றும் இவரது நடவடிக்கைகள் பற்றி உடனடியாக இரகசியப் பொலிசாரைக் கொண்டு புலன் விசாரணை செய்யும்படியும் வற்புறுத்தி, பாதிக்கப்பட்ட அரச ஊழியர் கழகத்தலைவர் டாக்டர் கே. பாலசிங்கம் பிரதமமந்திரிக்கு அவசரத் தந்தியொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

போக்குவரத்து அமைச்சருடன் பாதிக்கப்பட்ட ரயில்வே ஊழியர்கள் தொடர்பாக செய்துகொள்ளப்பட்ட உடன்பாடுகளை அனுராதபுரம் ரயில்வே சுப்பிரிண்டன் திரு. பேர்ட்டி குணசேகரா மீறியதன்மூலம் அகௌரவப்படுத்தியுள்ளார். முன்பு விடுதி அறைகளில் ஊழியர்களை இருக்கச் செய்ததின்மூலம் இருவர் மிருகத்தனமாகக் கொல்லப்பட்டதற்கும், இருபத்துநான்குபேர் காயமுற்றதுக்கும் இவரே காரணமாய் இருந்துள்ளார் என்றும் தெரிவித்துள்ள டாக்டர் பாலசிங்கம் இது தொடர்பாக முழு அளவில் விசாரணை நடத்துவதற்கு இரகசியப் பொலிசாருக்கு உத்தரவிடும்படியும் கோரியுள்ளார்.

## பிரதமருக்கு பாதிக்கப்பட்டோர் கழகத் தலைவர் தந்தி

பாதிக்கப்பட்ட ஊழியர்கள் தொடர்பாக பிரதமமந்திரி எடுத்துள்ள தீர்மானங்களை உடனடியாகச் செயல்படுத்தும்படியும் டாக்டர் பாலசிங்கம் வற்புறுத்தியுள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பதட்டமான சூழ்நிலையை வழமையான நிலைக்குக் கொண்டுவர இம்மாதிரி அரசாங்கஅதிகாரிகளின் நடவடிக்கைகள் தடை செய்வதாய் இருக்கின்றனவென்றும் டாக்டர் பாலசிங்கம் பிரதமமந்திரிக்குச் சுட்டிக்காட்டியுள்ளார்.

## அரசின் தொடர்பு சாதன கொள்கை பற்றி அமைச்சர் விளக்கம்

கொழும்பு, புதன்

"அரசின் தொடர்பு சாதன கொள்கையின் அடிப்படை சுதந்திரமே எனவே தான் கடந்த கலவரத்தின் போது அவசரகாலநிலை பிரகடனம் செய்யவோ அன்றி பத்திரிகைத் தணிக்கைமுறை அமுல் செய்யவோ இல்லை".

இவ்வாறு தகவல் ஒலிபரப்பு அமைச்சர் திரு. டி. பி விஜயதுங்க கூறினார்.

கொழும்பு இலங்கைமன்றக் கல்லூரியில் நடைபெற்ற தொடர்பு சாதனங்களும் திட்டமும் என்ற கருத்தரங்கில் பேசுகையில் அமைச்சர் மேலும் பேசுகையில் கூறியதாவது: தொடர்பு சாதனங்களின் கொள்கைகளை அமைக்கும் பணியில் தனியார் துறையினரும் பங்கேற்க வேண்டும். (இ)

## தெங்கு...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

இக்கூட்டத்தில் திரு. த. இன்னையா எஸ். கிருஷ்ணபிள்ளை திரு. கு. கனேசன் ஆகியோரும் பேசினர்.

சம்மேளத்தின் போஷகராக திரு. த. இராசலிங்கம் எம். பியும் செயலாளராக திரு. க. நடராசா (ஆசிரியர்) தலைவராக திரு. சி. க. தம்பிமுத்துவும் தெரிவு செய்யப்பட்டதோடு 21 பேர் கொண்ட செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது. (உ)

**நாகம்ஸ்**
(சுன்னாகம்)
தினசரி 4-30 7-00
DARINGDOZEN
(Adults only)

**புலோலி சினிமாஸ்**
(பருத்தித்துறை)
தினசரி பி. ப. 4-30, 7-00
**Up The Front**

**RIO** (Jaffna)
Daily 4 Shows
WUTHERING HEIGHTS
MORE SUITABLE For Adults

## ஜி.ஜி., செவால் ஓவியங்கள் நாளையாழ். நகரில் வெளியீடு

யாழ்ப்பாணம், வியா.

அமரர்கள் ஜி ஜி. பொன்னம்பலம், முதறிஞர் எஸ். ஜே வி. செல்வநாயகம் இருவரினதும் ஓவிய வெளியீட்டு விழா நாளை வெள்ளிக்கிழமை மாலை 7 மணிக்கு யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. கல்வி கலை பண்பாட்டுக்கழக ஆதரவில் நடைபெறும் இவ்விழா கழகத் தலைவர் சட்டத்தரணி க. சோமசுந்தரம் தலைமையில் நடைபெறும். காப்பாளர்களான யாழ். வளாகத்தலைவர் பேராசிரியர் சு. வித்தியானந்தன், செல்வி புஷ்பா செல்வநாயகம் ஆகியோர் உரையாற்றுவர். வண. பிதா எவ். எக்ஸ் தனிநாயகம் அடிகளும் கலந்துகொள்வார்.

ஜி. ஜி. யும், செல்வாவும் உயிருடன் வாழ்ந்த காலத்தில் கழகப் பொதுச்செயலாளரான ஓவியர் ச. பெனடிக்ற் நேரில் வரைந்த இவ் ஓவியங்களை தேவிகா ஆர்ட் என்டர் பிரைஸ் ஸ்தாபனத்தார் இலவசமாகச் சீலையில் அச்சடித்து உதவியுள்ளனர். மற்றும் கடுதாசியிலும் இவ் ஓவியங்கள் அச்சாகியுள்ளன.

இவ்விழாவினைக் கழகத்தின் அறங்காவலர் குழுவினர் மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பர். (அ)

## வருடாந்த விழா

யாழ்ப்பாணம, வியா.

யாழ், லயன்ஸ் கழக நான்காவது வருடாந்த விழா, வட பிராந்திய இலங்கை வங்கி முகாமையாளர் லயன் எம். ஜே. ஏ. ஜெகநாதனின் இல்லத்தில் இம்மாதம் 25-ந் திகதி நடைபெறவிருக்கிறது.

சென்ற வருட வட்டாரஆளுநராயிருந்த லயன் பிரான்சிஸ் வர்ணகுலசூரிய. அவரது பாரியார் ஷாமேன் ஆகியோர் அதிதிகளாகக் கலந்துகொள்வார்கள். (க-அ)

## கிணற்றில் விழுந்து மரணம்

மட்டுவில், புதன்

சாப்பி தயாரிக்கத் தண்ணீர் எடுக்கக் கோவில் கிணற்றடிக்குச் சென்ற 55 வயதுப் பெண் ஒருவர் கால் இடறி கிணற்றில் விழுந்து மரணமானார்.

சாவகச்சேரிப்பகுதி திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கே. திரவியநாயகம் மரணவிசாரணை நடத்தினார்.

இறந்தவரான சின்னம்மா கணவனை இழந்தவர் என்றும் இவருக்கு அடிக்கடி தலைமயக்கம் வருவது வழக்கம் என்றும், சம்பவதினம் அதிகாலை [illegible] விளாவேலி ஐயனார் கோவில் கிணற்றில் தண்ணீர் எடுக்கப் போயிருந்தார் என்றும் நீண்ட நேரமாயும் திரும்பி வராமையால் தேடிச்சென்றபோது அவர் கிணற்றினுள் பிணமாக கிடந்தார் என்றும் விசாரணையில் கூறப்பட்டது.

விசாரணை முடிவில் விபத்து மரணம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (இ)

## கருத்தரங்கு

வவுனியா, புதன்

வவுனியா தொழில் இணைக்களத்தினுல் தொழிற்சங்கவாதிகளுக்கு "குடும்பத்திட்டமும் தொழிலாளர் கல்வியும் என்னும் பொருள்பற்றிய கருத்தரங்கு ஒன்று நவம்பர் மாதம் மூன்றாவது கிழமையில் நடைபெற இருக்கின்றது. இக்கருத்தரங்கு தொடர்ந்து மூன்று நாட்கள் நடைபெறும் (உ)

## நாளை லட்சார்ச்சனை

(மாவிட்டபுரம்

கீரிமலை சிவன் தேவஸ்தானத்தில் கேதார கௌரி விரதத்தை முன்னிட்டு நாளை தொடக்கம் 21 நாட்களுக்கு இலட்சார்ச்சனை இடம் பெறவுள்ளது.

மேற்படி ஆலயத்தில் எழுந்தருளியுள்ள நகுலாம்பிகா தேவிக்கு இடம்பெறும் இவ்விலட்சார்ச்சனையின் இறுதி நாளாகிய அடுத்தமாதம் 10-ம் திகதி சங்காபிஷேக விழாவும் இடம் பெறவுள்ளது. (அ)

மாதர் குலம் போற்றிடும் இரண்டாவது வெற்றி வாரம்!
**ராஜா-** யாழ்நகர் தினசரி 10-30, 2-15, 6-15, 9-45.
வெள்ளித் திரையின் விளக்கம் இது. திரையில் மின்னி மறையும் வண்ண ஜாலம். தித்திக்கும் தேன் இன்ப விருந்து
கே. எஸ். கோபாலகிருஷ்ணனின் அற்புதப் படைப்பு!
ஜெமினி, ஜெயசித்திரா,
எம். ஆர். ராதா, கே. ஆர். விஜயா
நடித்த
**தசாவதாரம்**
(கலர்)
(கண்ணபிரானின் பத்து அவதாரங்கள்)


### மணிவாக்கு

ஒருவன் எவ்வளவு தாங்க முடியுமோ அவ்வளவுக்கு மேலான கஷ்டம் அவனுக்கு ஏற்படுவதில்லை.

—மார்க்க ஒளரேலியஸ்

ஈழநாடு
The Eelanaadu

## விமானக் கடத்தல்

மேற்கு ஜெர்மன் விமானக் கடத்தல் நாடகம் பிரயாணிகளின் உயிருக்கு ஆபத்து எதுவுமில்லாமல் முடிவுக்கு வந்த செய்தி உலக மக்கள் அனைவருக்குமே மகிழ்ச்சியளிப்பதாகும்.

அந்த விமானத்தில் பிரயாணம் செய்த எண்பத்தாறு பிரயாணிகளும் ஐந்து நாட்கள் தங்கள் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு காலத்தைக் கழித்திருக்கின்றனர்.

எந்த நேரம் என்ன நடக்கும் என்ற அச்சத்துடனேயே அவர்கள் விமானத்திலிருந்தனர்.

தாங்கள் போவதற்குத் திட்டமிட்ட இடத்துக்குப் பதிலாக தங்களை யமலோகத்துக்கு அனுப்புவதற்கு ஆயத்தமாக நான்குபேர் யமதூதர்கள் போல் விமானத்தில் நிற்பதைப் பார்த்துக்கொண்டிருந்த பிரயாணிகளின் மனநிலை எப்படியிருந்திருக்கும் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவே நெஞ்சம் நடுங்கும்.

சமீபத்தில் நமது நாட்டில் இனக்கலவரம் ஏற்பட்டபோது வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழும் இடங்களில் வசித்துவந்த தமிழர்கள் கடத்தப்பட்ட விமானத்திலிருந்த பிரயாணிகளின் நிலையை உணர்ந்து கொள்ளக்கூடும்.

தங்களுடைய நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்கு விமானங்களைக் கடத்தி பிரயாணிகளைப் பணயம் வைப்பது இப்போது உலகில் சர்வசாதாரணமாகிவிட்டது.

இந்த விமானக் கடத்தலைத் தடுப்பது பற்றிப் பல நாடுகளும் ஆராய்ந்தன; சில தீர்மானங்களும் எடுக்கப்பட்டன.

ஆனால் விமானக்கடத்தலைத் தடுக்கமுடியவில்லை.

சமீபத்தில் இஸ்ரேலிய பிரயாணிகளைக் கொண்ட விமானத்தைக் கடத்தியவர்களுக்கு உகண்டாவின் 'என்டபே' விமான நிலையத்தில் இஸ்ரேலிய வீரர்கள் அதிரடி கொடுத்துப் பிரயாணிகளைக் காப்பாற்றினர்.

இஸ்ரேலியர்களின் 'என்டபே' அதிரடி முறையையே மேற்கு ஜெர்மன் வீரர்களும் பின்பற்றி எண்பத்தாறு பிரயாணிகளையும் காப்பாற்றியிருக்கின்றனர்.

விமானக் கடத்தலுக்குச் சரியான பதில் இதுதான் என்று இஸ்ரேலும் மேற்கு ஜெர்மனியும் நிரூபித்துக் காட்டியிருக்கின்றன.

விமானக் கடத்தல் நாடகத்தை நமது நாடும் ஒரு தடவை பார்த்திருக்கிறது.

நமது நாட்டில் மோட்டார்கார் கடத்தல்கள் இப்போது புதுவித உருவத்தை எடுத்துள்ளன.

இதற்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு நமது படைவீரர்கள் வழிகாண முடியாதா?

# "மருந்து உபகரணத் தட்டுப்பாட்டை நீக்குக"

## உள்ளூராட்சி மருத்துவர் கோரிக்கை

யாழ்ப்பாணம், வியாழன்

ஆயுர்வேத இலவச வைத்தியசாலைகளில் மருந்துகள் தட்டுப்பாடு, தேவையான உபகரணங்கள் வழங்கப்படாமை போன்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்குமாறு சுகாதார அமைச்சரைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஒன்றினை அகில இலங்கை உள்ளூராட்சிமன்ற சித்த-ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர்கள் சங்கம் நிறைவேற்றியுள்ளது.

வைத்திய கலாநிதி வி. சு. சண்முகநாதன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஆயுர்வேத வைத்தியசாலை சம்பந்தமான அரசாங்க நன்கொடையினை வருடா வருடம் தாமதமின்றி உள்ளூராட்சி மன்றங்கள் பெறக்கூடியதாக நடவடிக்கை எடுக்குமாறு உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

உதவியாளர்களின்றி இயங்கும் உள்ளூராட்சிமன்ற வைத்தியசாலைகளில் குறைந்தது ஒரு உதவியாளராவது நியமிக்க வேண்டுமென்றும், இது அரசாங்கக் கொள்கைத் திட்டத் திற்கமைய மக்களுக்கு வேலை வாய்ப்பினையும் அளிக்குமெனவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எடுத்துக் கூறி ஆவன செய்தல். சங்கம் சித்த மருந்துப்பாகசாலை ஒன்றை ஆரம்பித்து தரமான மருந்துகளை விநியோகம் செய்தல் முதலான தீர்மானங்களும் நிறைவேறின.

மேற்படி தீர்மானங்களை வைத்தியகலாநிதி பொ. இராமநாதன் பிரேரிக்க, மேற்படி சங்கச் செயலாளர் வைத்திய கலாநிதி இ. கனகலிங்கம் அனுமதிக்கச் சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது. (உ)

## 'அமிர்' கூட்டிய மாநாட்டில் தொகுதி அபிவிருத்தி ஆய்வு

மாவிட்டபுரம், புதன்

காங்கேசன்துறைத் தொகுதி அபிவிருத்தி வேலைகள் பற்றி ஆராய திரு. அ. அமிர்தலிங்கம் எம். பி. கூட்டிய மாநாட்டில் தொகுதியின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பல கோரிக்கைகள் அவரிடம் சமர்ப்பிக்கப்பட்டபோதும் தற்போது கிடைக்கப்பெற்றுள்ள 2 லட்சம் ரூபாவைக் கொண்டு தொகுதியில் பரவலான முறையில் அத்தியாவசியத் தேவைகளை மட்டுமே தற்போதைக்கு மேற்கொள்வதென முடிவு செய்யப்பட்டது.

தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடந்த இம்மகாநாட்டில் உள்ளூராட்சி மன்றப் பிரதிநிதிகள், பாடசாலை அதிபர்கள், கிராம அபிவிருத்தி மன்றப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டு தத்தம் பகுதிகளில் மேற்கொள்ளப்படவேண்டிய அபிவிருத்தி வேலைகள் பற்றி எடுத்துக் கூறினர்.

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலைச் சீமெந்துத் தூசி கிராமங்களுக்குள் புகுந்து சுகாதாரத்திற்குப் பங்கமேற்படுத்துவதுடன், விவசாயத்தையும் பாதிப்பதால் அதை நிறுத்த உடன் நடவடிக்கை எடுக்குமாறும், மயிலிட்டி மீன்பிடித்துறைமுக வேலைகளைத் துரிதப்படுத்துமாறும் திரு. அமிர்தலிங்கத்திடம் தெரிவிக்கப்பட்டது.

இறுதியில் தொகுதியில் 3 இடைப் பாலங்கள், 2 வீடமைப்புத் திட்டங்கள், நீர் விநியோகத் திட்டம் ஒன்று, பொதுக்கிணறு 2 புதிய வீதி 2, உப தபால்நிலைய 2, தொழிற்பயிற்சி நிலையம் ஒன்று ஆகியவற்றுக்குச் சிபார்சுசெய்வதென முடிவாகியது. (உ)

## சிவானந்த குருகுலம்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் நீராவியடி கடைச்சாமி வீதியில் அகில இலங்கை இந்து மகாமன்றத்தின் ஆதரவில் நடைபெறும் சிவானந்த குருகுல பாடசாலை நவராத்திரி விடுமுறைக்குப் பின் இம்மாதம் 22-ம் திகதி சனிக்கிழமை காலை 8-00 மணிக்கு சரஸ்வதி பூஜையுடன் ஆரம்பமாகவிருக்கிறது. அன்று புதிய மாணவர்களை குருபரம்பரைப் பெற்றோர்கள் அழைத்துவந்து வித்தியாரம்பம்செய்துவைத்து பாடசாலையில் சேர்க்கப்படுவர் என குருகுலநிர்வாகஸ்தர் பிரம்மஸ்ரீ ப. சுப்பிரமண்ய ஐயர் அறியத்தருகிறார். (அ)

## விவசாய காப்புறுதித்திட்டம்: தீவிர அமுலாகும்

உடுப்பிட்டி, புதன்

வடமராட்சியில் கமத்தொழிற் காப்புறுதித் திட்டத்தை இவ்வாண்டுக்கான பெரும்போகத்தில் தீவிரமாக அமுல் செய்யப் பயிர்க்காப்புறுதிச் சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கு முன்னோடியாக உடுப்பிட்டிப் பயிர்ச் செய்கைக் குழு, புலோலிப் பயிர் செய்கைக் குழு, கட்டைவேலிப் பயிர்ச் செய்கைக் குழு, நெல்லியடிப் பயிர்ச் செய்கைக் குழு ஆகிய நான்கு பயிர்ச் செய்கைக் குழுப் பகுதிகளிலும் உள்ள விவசாயிகளிடமிருந்து நெற்செய்கைக்கான கமத் தொழிற் காப்புறுதியை அறவிடப் புலோலி கமத் தொழில் விளைவுப் பெருக்கக் குழு முடிவு செய்துள்ளது.

அடுத்த மாதம் 31-ம் திகதிக்கு முன்னர் கமத் தொழிற் காப்புறுதிக் கட்டுப் பணங்களைச் செலுத்த வேண்டுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இத்திகதிக்கு முன்பாக விதைக்கப்படுவதற்கு முன்னரே கட்டுப்பணங்கள் செலுத்தப்பட வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## தெல்லிப்பழை லயன்ஸ் கழக சேவை

மாவிட்டபுரம், புதன்

உலக லயன்ஸ் சேவை தினத்தை முன்னிட்டு தெல்லிப்பழை லயன்ஸ் கழகத்தினர் இப்பகுதியில் பல்வேறுபொது நல சேவைகளில் ஈடுபட்டதுடன் இளவாலை அநாதை இல்லச்சிறுவர்களுக்கு இலவச உணவளித்தனர்.

தெல்லிப்பழைப் பகுதியில் மலசல கூடவசதியற்றுத் தவிக்கும் ஏழைப்பொதுமக்களுக்கு மலசலகூடங்கள் அமைத்துக் கொடுப்பதிலும் தெல்லிப்பழை அரசினர் ஆஸ்பத்திரி வார்ட்டுகளிலுள்ள கட்டில்களுக்கு மைபூசியும் ஆஸ்பத்திரி வாய்க்காலைத் துப்புரவாக்கியும் பல்வேறு பொதுநலசேவைகளிலீடுபட்ட தெல்லிப்பழைலயன்ஸ் கழகத்தினர் இளவாலை அநாதைச் சிறுவர்களுக்கும் உணவளித்தனர்.

கழகத்தலைவர் சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் தலைமையில் நடந்த இச்சேவைகளில்லயன்ஸ் கழக உறுப்பினர்கள் யாவரும் கலந்துகொண்டனர். (அ)

## சுவீப் முடிவுகள்

கொழும்பு, செவ்வாய்

பிலியந்தலையில்நேற்று இழுக்கப்பட்ட 635-வது சுவீப் முடிவுகள்.

1-ம் பரிசு
**34 L 0430**
ரூ. 100000/-

2-ம் பரிசு
**11 T 0981**
ரூ. 40000/-

3-ம் பரிசு
**10 W 0900**
ரூ. 10000/-

தலா 1,200 கொண்ட நூறு ஆறுதல் பரிசுகள் வருமாறு:

| | |
|---|---|
| 27 A 0362 | 39 A 0611 |
| 54 A 0616 | 50 A 0770 |
| 44 A 0187 | 01 A 0278 |
| 30 B 0901 | 27 B 0398 |
| 07 B 0056 | 12 B 0979 |
| 17 B 0486 | 14 C 0907 |
| 50 C 0589 | 37 D 0168 |
| 10 D 0070 | 46 D 0491 |
| 17 D 0924 | 44 E 0137 |
| 32 E 0058 | 34 E 0883 |
| 31 E 0886 | 52 E 0713 |
| 24 F 0304 | 06 F 0485 |
| 02 G 0611 | 38 H 0195 |
| 14 H 0212 | 08 J 0853 |
| 37 J 0892 | 42 J 0312 |
| 33 J 0900 | 31 K 0008 |
| 13 K 0284 | 04 K 0021 |
| 02 K 0957 | 22 L 0306 |
| 22 L 0951 | 34 L 0562 |
| 20 L 0443 | 50 L 0659 |
| 39 M 0847 | 01 M 0291 |
| 14 N 0719 | 33 N 0126 |
| 35 N 0007 | 32 N 0172 |
| 23 N 0499 | 22 O 0421 |
| 54 O 0766 | 32 O 0882 |
| 12 O 0270 | 46 O 0374 |
| 29 P 0975 | 43 P 0058 |
| 44 P 0654 | 46 Q 0057 |
| 27 Q 0037 | 14 Q 0004 |
| 03 Q 0715 | 52 Q 0254 |
| 20 Q 0535 | 21 Q 0336 |
| 05 R 0630 | 11 R 0257 |
| 01 R 0511 | 31 R 0646 |
| 27 R 0666 | 04 R 0157 |
| 20 S 0074 | 24 S 0426 |
| 39 S 0967 | 15 T 0954 |
| 13 T 0404 | 02 T 0662 |
| 45 T 0507 | 19 U 0681 |
| 37 V 0551 | 21 V 0727 |
| 01 V 0218 | 28 V 0961 |
| 34 W 0604 | 52 W 0038 |
| 49 W 0247 | 01 W 0823 |
| 11 W 0705 | 01 W 0786 |
| 21 X 0253 | 40 X 0454 |
| 18 X 0894 | 15 X 0198 |
| 26 X 0862 | 17 X 0212 |
| 44 Y 0866 | 13 Y 0572 |
| 24 Y 0671 | 38 Y 0224 |
| 40 Y 0302 | 29 Y 0985 |

(இவை யாவும் உறுதிப்படுத்தப்படவேண்டும்.)

## நாடும் நடப்பும்

'மல்லிகை' அலுவலகத்துக்கு நேற்று நண்பகல் சைக்கிளில் வந்திறங்கிய ஒருவர் திரு. டானியல் இருக்கிறாரா?'' என்று கேட்டார்.

அங்கு நின்றவருக்கு இது ஆச்சரியமாக இருந்தது.

இது 'மல்லிகை' அலுவலகம். இதன் ஆசிரியர் திரு. டொமினிக் ஜீவா. அவர் வெளியே போயிருக்கிறார் என்று அச்சகஊழியர் திரு சந்திரசேகரம் பதில் சொன்னபடியே 'மல்லிகை'யின் இம் மாத இதழில் ஒரு பிரதியையும் அவரிடம் கொடுத்தார்.

அந்தப் பிரதியைக் கையில் வாங்கியதும் சைக்கிளில் வந்தவருக்குக் கண்கலங்கிவிட்டது.

''இவரைப்பார்ப்பதற்காகத்தான் இங்கே வந்தேன். அவர் மறைந்துவிட்டார் என்றசெய்தியைக் கேள்விப்பட்டேன். பெரும் கவலையாயிருக்கிறது'' என்று அவர் மல்லிகையின் அட்டைப்படத்தைப் பார்த்தபடியே சொன்னார்.

அட்டைப்படம் அமரர் மு. கார்த்திகேசனுடையது!

சைக்கிளில் வந்தவர் தமிழ்நாட்டில் ஈரோட்டைச் சேர்ந்தவர். யாழ்ப்பாணத்தில் 1943ம் ஆண்டு தொடக்கம் 1952ம் ஆண்டுவரை வசித்தவராம். யாழ்ப்பாண நகரில் காங்கேசன்துறை வீதியில் அவர் தங்கியிருந்தாராம். கார்த்திகேசு மாஸ்டர் தமக்குப் பல உதவிகள் செய்ததாகப் பெருந்தன்மையுடன் சொன்னார்.

0 0 0

தபாற்கந்தோர் விடுமுறை நாளாக இருந்தாலும் குறிப்பிட்ட தொகை முத்திரை செலுத்தினால் கொழும்பில் உள்ள தனியார் நிறுவனங்கள் தங்களுக்குரியதபால்பைகளைப் பெற்றுக்கொள்ளவசதியுண்டு. கொழும்பிலுள்ள பத்திரிகை நிறுவனங்கள் இவ்விதம் தமது தபால் பைகளைப் பெற்றுக் கொள்ளுகின்றன. இதனால் செய்திகளும் விளம்பரங்களும் பிந்தாமல் கிடைத்துவிடுகின்றன.

கொழும்பிலிருந்து வரும் 'மெயில் ரயில்' தாமதமாக வந்தால் கூட தபால்பைகளைப் பெறமுடியாததில்லை யாழ்ப்பாணத்திலிருந்து வருகிறது. கொழும்புக்கு வெளியே யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் ஒரேயொரு தினப்பத்திரிகை 'ஈழநாடு' தான்.

எத்தனையோ கஷ்டங்களுக்கிடையில் இப்படியும் ஒரு சங்கடம் மெயில் ரயில் தாமதமானால் மாலையிலாவது தபால் விநியோகம்செய்வதற்கு ஏதாவது வழிகாண முடியாதா?

0 0 0

யாழ்ப்பாணத்தில் இப்போது மழைகாலம் தொடங்கியிருக்கிறது. வீதிகளில் செல்வோர் வெள்ளை உடை யணிந்து செல்லாதிருப்பது நல்லது.

— ஊர்சுற்றி

## விமான நிலைய விஜய தசமி

யாழ்ப்பாணம், வியா.

பலாலி விமான நிலைய ஊழியர்கள் விஜயதசமி விழாவை நாளை வெள்ளிக்கிழமை சிறப்புடன் கொண்டாடப்படவிருக்கின்றனர்.

விமானத் தளபதி திரு. த இராஜநாயகம் தலைமையில் இவ்விழா நடைபெறும். விசேட நிகழ்ச்சிகளும் இடம் பெறும். (உ)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 20 ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No. 49, Jaffna. Telegram Eelnaadu Telephone 389, Registerd as News paper in Sri Lanka